இலங்கை திறந்த பல்கலைக்கழகம்,
சட்மாணிப் பட்டப்படிப்புத் திட்டம் - மட்டம் 6
இறுதிப்பரீட்சை 2006/2007
சர்வதேச மனித உரிமைகள் சட்டம் - LWU 3325/4325
காலம் : 3 மணித்தியாலங்கள்.

திகதி: 19.03.2007 நேரம்: பி.ப 1.30 – பி.ப 4.30

ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.
தெளிவற்ற கையெழுத்துக்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. "மேற்குலக நாடுகளில் தோன்றியது என்ற காரணத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு மனித உரிமைகள் கருத்தேற்பை ஒரு மேற்குலக கருத்தேற்பு என கருதமுடியாது"
மனித உரிமைகளின் தத்துவார்த்த மற்றும் மத அடிப்படைகள் ஆகிய அமைப்புடன் தொடர்புருத்தி மேற் கூறப்பட்டுள்ள கூற்றின் வலிதாந்தன்மையை விமரிசித்து மதிப்பிடுக.

2. மனித உரிமைகள் கருத்தேற்புகளின் அபிவிருத்தியில் ஆசிய நாடுகளின் மத மற்றும் அரசியல் கலாச்சாரம் போன்றவற்றின் விசேட கூறுகள் இடம் பெறவில்லை என வாதிடப்படுகிறது. ஆகையால் இக் கோட்பாடு ஆசிய நாடுகளுக்கு அந்நியப்பட்ட ஒரு கருத்தேற்பு என வாதிடப்படுகிறது.

இக்கூற்றுடன் நீர் உடன்படுகிறீரா? நடைமுறை எடுத்துக்காட்டுகளுடன் உமது நிலையை விளக்குக.

3. மனித உரிமைகள் கோட்பாட்டில் பொருளாதார, சமூக அபிவிருத்தியை விட குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது என மனித உரிமைகள் விமர்சகர்கள் வாதிடுகின்றனர்.

'மனித உரிமைகள் கருத்தேற்பின் பாராதீனப்படுத்தப்படமுடியாத தன்மை' என்ற வகையில் மேற்கூறப்பட்ட நிலையின் வலிதாந்தன்மையை மதிப்பிடுக.

4. "இதற்கமைய ஏற்படக்கூடிய நிலைமை யாதெனில் ஜெனிவாவிலுள்ள மனித உரிமை ஆணைக்குழு எமது அரசியலமைப்பின் கீழான நீதித்துறை அதிகாரத்தின் கீழ் உருவாக்கப்படாமையால் இவ் ஆணைக்குழுவின் ஊடாக விண்ணப்பதாரி தன்னுடைய உரிமைகள் தொடர்பாக உரித்துகோரவோ அல்லது தன்னுடைய உரிமைகளை அமுல் படுத்துமாறு கோரவோ இயலாது...இந்த அவதானிப்புகளின் அடிப்படையில் கூறக்கூடியது யாதெனில் அரசியலமைப்புக்கு அமைய உருவாக்கப்பட்டுள்ள குடியரசினுடைய உயரிய இறுதியான உயர் நீதிமன்றமான இந்த நீதிமன்றத்தில் விண்ணப்பதாரி கோருகின்றவாறு அரசியல் அமைப்புக்கு அமைய எந்தவித நீதித்துறை அதிகாரத்துடனும் உருவாக்கப்படாத மனிதஉரிமை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் கட்டளையை புறத்தொதுக்கவோ அல்லது மாற்றவோ இயலாது என்பதாகும்". [per The Supreme Court of Sri Lanka in the case of Nallaratnam Singarasa Vs Attorney General (S.C 182/99)]

மேற்கூறப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் சர்வதேச சமவாயம் மற்றும் அதனுடைய விருப்புரிமை ஆவனம் (Optional Protocol) ஆகியவற்றை ஏற்றுக்கொண்டுள்ள இலங்கையின் கடப்பாடுகளின் எல்லை தொடர்பில் ஆராய்க.

5. லுபா, தபோ என அழைக்கப்பட்ட சிறுபான்மை சமூகமொன்றின் தலைவன் ஆவான், கடந்த பத்து வருடங்களாக செரண்டிப் நாட்டின் தென்பகுதியில் தனிநாடு ஒன்று கோரி போராடி வருகின்றான். 2001ம் ஆண்டு லுபாவினுடைய போராளிகள் தமது கட்டுப்பாட்டு பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்ற ஆயிரத்திற்கு மேற்பட்ட பொது மக்களை படுகொலை செய்ததுடன் ஏனைய சமூகங்களை சேர்ந்த பொது மக்களை தமது பிரதேசத்தில் இருந்து விரட்டியதோடு நிர்பாசண திட்டங்களை அழித்ததன் மூலம் அவர்களுடைய சாதாரண வாழ்க்கைக்குரிய தடைகளையும் ஏற்படுத்தினர். மேலும் அப்பிரதேசத்தில் பெரும் எண்ணிக்கையான பெண்களை குழுவாக சேர்ந்து பாலியல் வன்முறைக்கு உட்படுத்தினர். சிறுவர்களை பாடசாலை மற்றும் அவர்களுடைய பெறறோரிடம் இருந்து பலாத்காரமாக கடத்தி தமது படையில் சேர்ப்பதற்குரிய நடவடிக்கைகளை லுபா அண்மைக் காலமாக ஆரம்பித்துள்ளான்.

செரண்டிப் அரசு சர்வதேச நீதிமன்றத்திற்கான உரோம நியதிச்சட்டத்தின் ஒரு திறத்தவராகும் 'Alfa' என அழைக்கப்படும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவணம் லுபா மற்றும் அவனுடைய போராளிகளுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய விரும்புகிறது. 'Alfa' வுக்கு ஆலோசனை வழங்குக.

6. "1989ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால், சிறுவர்கள் உரிமைகளுக்கான சமவாயம் உருவாக்கப்பட்டதில் இருந்து சிறுவர்களுடைய உரிமைகளை சர்வதேசரீதியில் பாதுகாக்கின்ற பொறுப்புகள் முன்னொருபோதும் இல்லாத வகையில் வளர்ச்சி அடைந்துள்ளது"

சிறுவர் உரிமைகள் பாதுகாப்பு தொடர்பில் இலங்கைச் சட்டம் சர்வதேச தராதரத்துடன் இசைந்து செல்கிறதா என்பதை ஆராய்க.

7. பெண்களுக்கு எதிரான அனைத்து பாரபட்சங்களையும் இல்லாது ஒழிப்பதற்கான சமவாயத்தின் கீழ் உருவாக்கப்பட்ட குழுவினுடைய 19வது பொது ஆலோசனைக்கு அமைய பால் அடிப்படை முறையிலான வன்முறைகள், பெண்கள் தமது உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை ஆண்களுடன் சம அடிப்படையில் அனுபவிக்கக்கூடிய இயலுமையை தடைசெய்யும் ஒரு வகையான பாரபட்சமென குறிப்பிடப்பட்டுள்ளது.
இலங்கை பெண்களுடைய அந்தஸ்த்தை ஆளுகின்ற சட்ட கட்டமைப்பின் போதுமான தன்மைக்கு விசேட கவனம் கொடுத்து மேலே குறிப்பிட்ட கூற்றினுடைய விளைவுகளை ஆராய்க. இந்த துறை தொடர்பான சட்டத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள சட்டவாக்க நடவடிக்கைகளையும் நீதி முறை அபிவிருத்திகளையும் நீர் கருத்திற் கொள்ள வேண்டும்.

8. பின்வரும் தலைப்புக்களில் ஏதேனும் இரண்டினைப்பற்றி குறிப்பெழுதுக.

(அ) சிறுபான்மையினரை பாதுகாத்தல்

(ஆ) மனித உரிமைகள் கலந்துரையாடலும் மரண தண்டனையும்

(இ) இனப்படுகொலை குற்றங்களை தடுத்தல் மற்றும தண்டனை வழங்களுக்கான சமவாயம்

(ஈ) ஐக்கியநாடுகள் சபையின் மனித உரிமைகள் சபை

(பதிப்புரிமைபெற்றது)